**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.255/2023

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் நாள் திங்கள் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.03.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | மகேஷ் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 27.11.1947 பாகபிரிவினை பத்திரம் வா.சா.ஆ.1 ஆகவும்

2) 25.03.2016 கஞ்சமலைபெயரில் உள்ள பட்டா நகல் வா.சா.ஆ.2 ஆகவும்

3) 21.08.2020- வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும்

4) 19.08.2021 – 8 ம் எதிர் வாதி பதில் அறிவிப்பு வா.சா.ஆ. 4 ஆகவும்

5) 01.07.2021 வருவாய் துறை கடிதம் வா.சா.ஆ. 5 ஆகவும்

6) 22.07.2022 - 2 ம் வாதி அறிவிப்பு வா.சா.ஆ. 6 ஆகவும்

7) 25.07.2022 அஞ்சல் துறை இணைதளத்தில் எடுக்கப்பட்ட இணைய தள சான்று வா.சா.ஆ. 7 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**